ආරක්ෂක අමාත්‍යාංශය
பாதுகாப்பு அமைச்சு
MINISTRY OF DEFENCE

ජාතික ආපදා සහන සේවා මධ්‍යස්ථානය
தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்
National Disaster Relief Services Centre
විද්‍යා මාවත, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
வித்யா மாவத்தை , கொழும்பு 07, இலங்கை
Vidya Mawatha, Colombo 07, Sri Lanka

දු.අ. /தொ.எ / T.N. 0112665258
ෆැක්ස් / பெக்ஸ் / Fax 0112665702
වි.තැ. / மி.அ.மு. / Email sahana.ndrsc@gmail.com

මගේ අංකය / எனது இல / My No. NDRSC/02/04/10

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date 2026.01.

**அனைத்து மாவட்டச் செயலாளர்கள்,**

**அனைத்து பிரதேச செயலாளர்கள்,**

**அனர்த்த பாதிப்பினால் முடங்கியுள்ள வணிகங்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல்**

"திட்வா சூறாவளி" காரணமாக ஏற்பட்ட அவசர அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீர்குலைந்துள்ள பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை வழமைக்குக் கொண்டுவருவதற்காக, 2025.12.05 திகதியிடப்பட்ட வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை இல. 08/2025, 2025.12.20 திகதியிடப்பட்ட வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை இல. 08/2025(i) மற்றும் 2026.01.22 திகதியிடப்பட்ட வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை இல. 08/2025(iii) ஆகியவற்றின் மூலம் முன்மொழியப்பட்ட 'பாதிக்கப்பட்டவர்களை வலுவூட்டும் திட்டத்தின்' கீழ், வர்த்தக ரீதியான பாதிப்புகளுக்கான கொடுப்பனவு வழங்கும் வேலைத்திட்டத்தை மிகவும் திறமையாகவும் வினைத்திறனுடனும் செயல்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் விளக்கங்களை வழங்குவதற்காக இந்த வழிகாட்டி வெளியிடப்படுகிறது.

**02.** அதன்படி, 2025 நவம்பர் 21 முதல் 2025 டிசம்பர் 31 வரை நிலவிய பாரிய அனர்த்த நிலைமையின் போது வர்த்தகங்ளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் இதற்கு ஏற்புடையதாகும்.

இந்த வழிகாட்டி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உடன்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.

**03.** இந்த வர்த்தகப் பாதிப்புகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கும்போது, கிராமிய அனர்த்த முகாமைத்துவ மற்றும் நிவாரணச் சேவைக் குழுவின் அதிகாரிகளுக்கும் பிரதேச செயலாளருக்கும் ஆதரவாக, தற்போதுள்ள கட்டமைப்புக்கு மேலதிகமாக பின்வரும் அதிகாரிகளுக்கும் பொறுப்புகள் வழங்கப்படுகின்றன:

- கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- சிறு வர்த்தக அபிவிருத்தி உத்தியோகத்தர்
- தொழில்முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்
- உற்பத்தித்திறன் மேம்பாட்டு உத்தியோகத்தர்
- ஏற்றுமதி அபிவிருத்தி உத்தியோகத்தர்

**04. கிராமிய அனர்த்த முகாமைத்துவ மற்றும் நிவாரணச் சேவைக் குழுவின் தற்போதைய பணிகளுக்கு மேலதிகமாக பின்வரும் பணிகளும் உள்ளடக்கப்படுகின்றன:**

(அ) கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுள்ள வர்த்தக உரிமையாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் தகவல்களைச் சேகரித்தல்.

(ஆ) உரிய கொடுப்பனவுகள் பயனாளிகளுக்குச் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்தல் மற்றும் கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக எழும் சிக்கல்களைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தல்."

**05. வர்த்தகப் பாதிப்புகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல்**

பாரிய அனர்த்த நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்டு, வர்த்தகச் செயற்பாடுகள் முடங்கியுள்ள தனிப்பட்ட, சிறு மற்றும் நுண் வர்த்தகங்களை மீண்டும் வழமைக்குக் கொண்டுவருவதற்காக வர்த்தக உரிமையாளர்களுக்குக் கொடுப்பனவுகளை வழங்குவது இதில் உள்ளடங்குகின்றது.

**5.1** இங்கு, வர்த்தகங்களை வகைப்படுத்துவதற்கு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2025.12.08 திகதியிட்ட 2025/02 இலக்கக் கைத்தொழில் சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்டுள்ள பின்வரும் அளவுகோல்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்:

| **பிரிவு** | **அளவுகோல்** | **சிறு வர்த்தகம்** | **நுண் வணிகம்** |
|---|---|---|---|
| **உற்பத்தித் துறை** | வருடாந்த வருமானம் | ரூ. மில்லியன் 20 – 350 | ரூ. மில்லியன் 20க்குக் குறைவு |
| | ஊழியர் எண்ணிக்கை | 10 - 50 | 10க்குக் குறைவு |
| **சேவைத் துறை** | வருடாந்த வருமானம் | ரூ. மில்லியன் 20 – 350 | ரூ. மில்லியன் 20க்குக் குறைவு |
| | ஊழியர் எண்ணிக்கை | 5 - 50 | 5க்குக் குறைவு |

**5.2 அனர்த்த நிலைமையால் சேதமடைந்துள்ள நிரந்தர வணிகக் கட்டடங்களை உடைய வர்த்தக உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்குதல்**

**5.2.1** அனர்த்தத்தினால் சேதமடைந்துள்ள நிரந்தர வர்த்தகக் கட்டடங்களைக் கொண்ட உரிமையாளர் ஒருவர், தனது வர்த்தகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்ற வகையில் அக்கட்டடத்தைச் சீரமைப்பதற்காகப் பின்வருமாறு இழப்பீடு வழங்கப்படும்:

- **5.2.1.1** சேதமடைந்த வர்த்தகக் கட்டடத்தைச் சீரமைக்க, சேத மதிப்பீடு (Damage Assessment) இன்றி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கும் வர்த்தக உரிமையாளர்களுக்கு ரூ. 500,000/- வழங்கப்பட வேண்டும்.
- **5.2.1.2** இத்தொகையில் ரூ. 300,000/- ஆரம்பத் தவணையாக வழங்கப்பட்டு, வர்த்தகக் கட்டடம் அனர்த்தங்களைத் தாங்கக்கூடிய வகையில் (Disaster Resilient) புனரமைக்கப்படுவதை உறுதி செய்த பின்னரே எஞ்சிய ரூ. 200,000/- வழங்கப்படும்.

**5.2.2** "பின்வரும் **(அ)** முதல் **(உ)** வரையிலான கட்டடப் புனரமைப்புப் பணிகளில் குறைந்தபட்சம் ஒன்றையாவது மேற்கொள்ளும் நிரந்தர வர்த்தக கட்டடப் புனரமைப்புகளுக்கு மாத்திரமே, மேலே **5.2.2** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மதிப்பீடுகள் எதுவுமின்றி வழங்கப்படும் ரூ. 500,000/- கொடுப்பனவு உரித்தாகும்:

(அ) நிரந்தர வர்த்தகக் கட்டடத்திற்குப் புதியதொரு பகுதியை அனர்த்தங்களைத் தாங்கக்கூடிய வகையில் புனரமைத்தல் அல்லது புதிதாக அமைத்தல்.

(ஆ) வர்த்தகக் கட்டடத்தின் கூரையை நிரந்தரமாகச் சீரமைத்தல்.

(இ) கட்டடத்தின் சுகாதாரம் மற்றும் துப்பரவேற்பு வசதிகளை மேம்படுத்தல் அல்லது புதிதாக அமைத்தல்.

(ஈ) கட்டடம் அனர்த்தங்களைத் தாங்கக்கூடிய வகையில் பாதுகாப்புச் சுவர்கள் அல்லது காணிப் பாதுகாப்பு முறைகளை அமைத்தல்.

(உ) எதிர்கால அனர்த்தங்களைத் தாங்கக்கூடிய வகையில் சேதமடைந்த வர்த்தகக் கட்டடத்தைப் புனரமைத்தல்.

**5.2.3** இந்த அனர்த்தத்தினால் வர்த்தகக் இடத்திற்கு ஏற்பட்டுள்ள சேதத்தை ரூ. 500,000/- ஐ விடக் குறைந்த தொகையில் சீரமைக்க முடியும் என்ற போதிலும், பயனாளியின் சேதமடைந்த நிரந்தர வர்த்தகக் கட்டடம் தரமான முறையில் கட்டப்பட்டிருக்கவில்லை எனில், மிகவும் பாதுகாப்பான ஒரு நிரந்தர வர்த்தகக் கட்டடத்தை அல்லது அதன் ஒரு பகுதியை அமைப்பதற்கு இப் பணத்தைப் பயன்படுத்தலாம். இதன் மூலம், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ளும் வகையில் நிரந்தர வர்த்தகக் கட்டடத்தைப் புனரமைப்பது எதிர்பார்க்கப்படுவதுடன், அதன் வழியாக அனர்த்த நிவாரணங்களுக்காக எதிர்காலத்தில் செலவிட வேண்டியிருக்கும் செலவுகளைக் குறைப்பதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு வழங்கப்படும் ரூ. 500,000/- தொகையைப் பயன்படுத்தி, வர்த்தகக் இடத்தை அனர்த்தங்களைத் தாங்கக்கூடிய வகையில் அமைப்பதற்கு/புனரமைப்பதற்கு மேற்கொள்ள உத்தேசித்துள்ள பணிகள் குறித்துப் பயனாளி விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அதற்கமைய, அப் பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை கிராமிய அனர்த்த முகாமைத்துவ மற்றும் நிவாரணச் சேவைக் குழு வழங்கும்."

**5.2.4** சேத மதிப்பீட்டின் பின்னர் இழப்பீட்டைப் பெற விரும்பும் வர்த்தக உரிமையாளர்களுக்கு, மதிப்பீட்டின் அடிப்படையில் அதிகபட்சமாக ரூ. 5,000,000/- (50 இலட்சம்) வரை இழப்பீடு வழங்கப்படலாம்.

**5.2.5** சேத மதிப்பீட்டின் பின்னர் இழப்பீடு பெறுபவர்களுக்கு, மேலே குறிப்பிட்ட ரூ. 500,000/- கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது.

**5.2.6** இந்த இழப்பீட்டுப் பணத்தை வழங்கும்போது கிராம உத்தியோகத்தர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், தேசிய உற்பத்தித்திறன் செயலக உத்தியோகத்தர், தொழில் அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் அல்லது அது தொடர்பான ஏனைய உத்தியோகத்தர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**5.2.7** வணிகக் கட்டடத்தைச் சீரமைப்பதற்காக ரூ. 500,000/- இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு:

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பம் (NDRSC 3.8 Business படிவம்).- இணைப்பு01
- வர்த்தக பதிவுச் சான்றிதழ்.
- வர்த்தக அனுமதிப்பத்திரம் (Trade License).
- வர்த்தகத்தை கொண்டு நடத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ள ஏனைய ஆவணங்கள்.
- விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் / கடவுச்சீட்டு பிரதி.
- சேதமடைந்த வணிக இடத்தின் 4 தெளிவான புகைப்படங்கள்.
- சொத்துரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்/ உறுதிப்பத்திரத்தின் பிரதிகள் (அரசு காணி எனில் பிரதேச செயலாளரின் அனுமதி).

**5.2.8 ரூ. 5,000,000/- வரையிலான (மதிப்பீட்டின் அடிப்படையிலான) இழப்பீட்டைப் பெறத் தேவையான ஆவணங்கள்:**

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் (NDRSC 3.8 Business மாதிரிப் படிவம்) - இணைப்பு 01
- வர்த்தக பதிவுச் சான்றிதழ்
- வர்த்தக அனுமதிப்பத்திரம் (Trade License)
- வணிகத்தை நடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள்
- விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் / முதியோர் அடையாள அட்டை / கடவுச்சீட்டு பிரதி
- சேதமடைந்த வணிக இடத்தின் 4 தெளிவான புகைப்படங்கள்
- சொத்துரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், உறுதிப் பிரதிகள், அரச காணியாக இருந்தால் பிரதேச செயலாளரின் உடன்பாடு
- பிரதேச செயலக மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை மற்றும் அனுமதி
- வணிகக் கட்டடம் அமைந்துள்ள நிலம் தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை

**5.3 வர்த்தகங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவு:**

- அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சீரமைப்புப் பணிகளுக்காக, அனர்த்தம் ஏற்பட்ட காலப்பகுதியில் அந்த வர்த்தகத்தை நடத்தி வந்த உரிமையாளருக்கு இந்தக் கொடுப்பனவு உரித்தாகும்.
- அனர்த்தத்திற்குள்ளான வர்த்தகக் கட்டடத்தை வாடகை அடிப்படையில் பெற்று வர்த்தகதை நடத்தி வந்த ஒருவரின் வர்த்தகம் பாதிக்கப்பட்டிருந்தால், இந்தக் கொடுப்பனவு அந்த வர்த்தக உரிமையாளருக்கு ரித்தாகும். அதேவேளை, அனர்த்தத்தினால் கட்டடத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்காக கட்டட உரிமையாளர் மேலே 5.2.1.1 அல்லது 5.2.4 இன் கீழ் இழப்பீடு கோர முடியும்.
- அனர்த்தம் ஏற்பட்ட காலப்பகுதியில் வர்த்தகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு, பொருட்கள் கொள்வனவு செய்த பற்றுச்சீட்டுகள், வர்த்தகம் தொடர்பாகப் பெற்ற கடன் ஆவணங்கள், வர்த்தகத்தின் பெயரில் செலுத்தப்பட்ட நீர் அல்லது மின்சாரக் கட்டணப் பட்டியல்கள் போன்றவற்றைப் பயனாளி சமர்ப்பிக்க வேண்டும்.

- கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுப் பாதிக்கப்பட்ட வர்த்தகங்கள் எனில், அனர்த்தம் ஏற்பட்ட காலப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதை உறுதிப்படுத்த சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், தேசிய உற்பத்தித்திறன் செயலக உத்தியோகத்தர், கைத்தொழில் அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது உரிய அதிகாரியிடமிருந்து பரிந்துரையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
    - NDRSC 3.9 விண்ணப்பப் படிவத்தின் (இணைப்பு 02) மூலம் உரிய இழப்பீட்டுத் தொகையைக் கோர முடியும்.

**வணிகத்தின் தன்மைக்கு ஏற்ப வழங்கப்படும் கொடுப்பனவுகள் பின்வருமாறு:**

| | **நிவாரணம்** | **கொடுப்பனவு** |
|---|---|---|
| **5.3.1** | கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட தனிப்பட்ட, சிறு மற்றும் நுண் வர்த்தகங்கள் | ஒரு அலகிற்கு **ரூ. 200,000/-** |

| | நிவாரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| 5.3.2 | பிரதேச செயலகத்தில் வர்த்தகமாகப் பதிவு செய்யப்பட்ட தனிப்பட்ட, சிறு மற்றும் நுண் வர்த்தகங்கள் | ஒரு அலகிற்கு ரூ. 200,000/- |
| 5.3.3 | பிரதேச செயலகத்தில் வர்த்தகமாகப் பதிவு செய்யப்படாமல், வீட்டில் நிரந்தரக் கட்டடத்தில் நடாத்தப்படும் வர்த்தக வணிகங்கள் | ஒரு அலகிற்கு ரூ. 50,000/- |
| 5.3.4 | சேதமடைந்த பதிவு செய்யப்படாத உற்பத்திக் கைத்தொழில்கள் மற்றும் பசுமை இல்லங்கள் (Greenhouses) போன்றவை | ஒரு அலகிற்கு ரூ. 50,000/- |
| 5.3.5 | நடைபாதை மற்றும் நடமாடும் வியாபாரிகள் உள்ளிட்ட தற்காலிகமாக முன்னெடுக்கப்படும் வர்த்தகங்கள் | ஒரு அலகிற்கு ரூ. 25,000/- |

- ஒரு பயனாளி மேலே உள்ள **5.3.3, 5.3.4** மற்றும் **5.3.5** ஆகிய பிரிவுகளின் கீழ் பல கொடுப்பனவுகளுக்குத் தகுதியுடையவராக இருந்தால், அவருக்கு அந்தப் பிரிவுகளில் ஏதேனும் ஒரு பிரிவின் கீழ் மட்டுமே கொடுப்பனவு வழங்கப்படும்.

**எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயியகொன்தா (ஓய்வுபெற்ற)**

டபிள்யுடபிள்யு,ஆர்டபிள்யு(மூன்றுதடவை),ஆர்எஸ்பீ(இரண்டு தடவை),யூஎஸ்பீ,

ஆர்எம்எஸ்(மூலோபாயக் கற்றைகள்-சீனா),எம்எஸ்சீ(பாதுகாப்பு கற்கைகள்)முகாமைத்துவம்

எம்எஸ்சீ(பாதுகாப்பு மற்றும் மூலோபாய கற்கைகள்),எவ்என்டீயூ(சீனா),பீஎஸ்சீ.

**செயலாளர்**

**பாதுகாப்பு அமைச்சு**

**பிரதிகள்:**

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவை செயலாளர்
4. செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
5. செயலாளர், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
6. செயலாளர், சுகாதார மற்றும் ஊடக அமைச்சு
7. கணக்காய்வாளர் நாயகம்

ஏற்புடையவாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு

NDRSC.3.8

**தொடர் இலக்கம் ( அலுவலக பாவனைக்கு மாத்திரம்)**

**திட்வா சூறாவளியின் பாதிப்பினால் சேதமடைந்துள்ள வர்த்தக கட்டிடங்களுக்கு நஷ்டு ஈட வழங்குவதற்கான விண்ணப்பப்பபடிவம்**

**விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்**

அனர்த்தம் இடம்பெற்ற காலப்பகுதி முதல் :

| மாவட்டம் | உரிமையாளர் நிரந்தரமாகக் குடியிருக்கும் | வர்த்தகம் அமைந்துள்ள |
|---|---|---|
| | | |
| பிரதேச செயலகப் பிரிவு | | |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | | |

விண்ணப்பதாரியின் (விண்ணப்பதாரி உரிமையாளராகக் காணப்படுதல் வேண்டும்) விபரம்

விண்ணப்பதாரியின் முழுப் பெயர்

வர்த்தகத்தின் பெயர்

வர்த்தகத்தின் தன்மை

வருடாந்த வருமானம்

ஊழியர்களின் எண்ணிக்கை

தேசிய அடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

முகவரி

| வசிப்பிட முகவரி |
|---|
| |

| வர்த்தகம் அமைந்துள்ள |
|---|
| |

| தொலைபேசி இலக்கம்: நிலையான | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையடக்க | | | | | | | | | | |

வங்கிக் கணக்கு விபரம்

வங்கி -

கணக்கு இலக்கம்

கிளை -

சேதமடைந்துள்ள சொத்து பற்றிய விபரம்

சொத்துக்கான உரிமை 1- அறுதி உறுதி

2. அரசாங்க நன்கொடைப் பத்திரம்

3.அரசாங்க உரிமம் பத்திரம்

4 கடமைரீதியான

5 சட்டவிரோத

6- ஏனைய (குறிப்பிடவும்)

கட்டிடத்தின் நிலைமை 1- நிரந்தரம்

2-பகுதியளவில் நிரந்தரமான

3- தற்காலிகம்

மொத்த நிலப்பரப்பு ( சதுரப்பரப்பளவு)

நிறுவனம் அமைந்துள்ள இடத்தின் தன்மை 1- தனிக் கட்டிடம்

2-மாடிக் கட்டிடம்

3- அடுக்கு மாடித் தொகுதி

மாடிகளின் எண்ணிக்கை 1 )-.கீழ் மாடி

2).1 மாடி

3). 2 மாடிகள்

4.)3 மாடிகள்

5. )4 மாடிகள்

6.)5 மாடிகள் அல்லது அதிகமானவை

விண்ணப்பதாரி உரிமையாளராகக் காணப்படாத பட்சத்தில், இதற்கான காரணங்களை நியாயப்படுத்தல்

விண்ணப்பதாரியின் பிரகடனம்

.............................. ஆம் திகதி மேற்படி முகவரியில் அமைந்திருந்த எனது நிரந்தர வர்த்தகக் கட்டிடம் சேதமடைந்தது. ஆகவே,அந்த சேதத்தை மதிப்பீடு செய்யாது /செய்ததன் பின்னர் நஷ்ட ஈட்டை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் கோருகின்றேன்.

**சேத மதிப்பீட்டை மேற்கொள்ளாது நஷ்ட ஈட்டை வழங்குவதற்கு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில், ரூ.50,000/- பணத்தொகையில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் புனரமைப்பு பணிகள்**

| ரூ.50,000/- பணத்தைக் கொண்டு வர்த்தக கட்டிடத்தை புனரமைப்பதற்கு/ அனர்த்தங்களுக்கு தாக்கும் பிடிக்கக் கூடிய முறையில் நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ள எதிர்பார்க்கும் பணிகள் / வேலை விபரங்கள் மற்றும் அதற்கான அண்ணளவான மதிப்பீடு | மேற்கொள்ள எதிர்பார்க்கும் புனரமைப்பு / நிர்மாணப்பணிகள் | குறிப்பிட்ட பணிக்கு செலவாகும் செலவு (ரூ) அண்ணளவாக |
|---|---|---|
| | | |
| | மொத்தம் | |

விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சத்தியப் பிரமாணக் கடிதத்தை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

.................................................... ..........................................................

கையொப்பம் திகதி

**இடம்பெற்றுள்ள சேதத்தின் அளவைப் பொறுத்து மதிப்பீட்டை மேற்கொள்ளாது நஷ்ட ஈட்டை பெற்றுக்கொள்ளுதல் அல்லது மதிப்பீட்டை மேற்கொண்டதன் பின்னர் நஷ்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஏற்ப தேவையான பகுதிகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.**

**பகுதி A**

**சேதத்தை மதிப்பீடு செய்யாது நஷ்ட ஈட்டை பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவிக்கும் பயனாளிக்கு நஷ்ட ஈடு வழங்குதல் குழுவின் அவதானிப்புகள்**

| | | |
|---|---|---|
| வர்த்தகத்தின் தன்மை | | |
| சேதம் பற்றிய அறிக்கை | கட்டிடம் | |
| அனர்த்தத்துக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய வித்தில் கட்டிடத்தை | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிர்மாணிப்பதற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் | | | | | |
| கட்டிடடத்தை நிர்மாணிப்பதற்கு / புனரமைப்பதற்கு விண்ணப்பதாரர் மேற்கொள்ளவுள்ள கருமங்கள் தொடர்பிலான ஆலோசனைகள் | | | | | |
| வர்த்தக சேதங்களை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் | வர்த்தக உரிமம் | | | | |
| | பதிவுச் சான்றிதழ் | | | | |
| | சொத்து உரிமையை உறுதிப்படுத்தும் பத்திரங்கள் | | | | |
| | | | | | |
| | | | | | |

குழுவின் விதப்புரை

.........................................................................................................................எனும் முகவரியில் அமைந்துள்ள வர்த்தகக் கட்டிடம் ..........................................................ஆம் திகதி அனர்த்தினால் சேதமடைந்துள்ளமையால், வர்த்தக கட்டிடத்தை மீண்டும் வழமைக்கு கொண்டு வருவதற்கு / புனரமைப்பதற்கு, குறிப்பிட்ட சேதத்தை மதிப்பீடு செய்யாது நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு பயனாளி தமது விருப்பத்தை தெரிவித்துள்ளமையால், மேற்குறிப்பிட்ட கருமங்கள் பற்றிய விபரங்களுக்கு அமைய கோரியுள்ள ரூ................................ பணத்தொகை பின்வரும் 02 தவணைகளில் செலுத்துவதற்கு விதப்புரை செய்கின்றேன்.

**முதலாவது தவணையில் ரூ.300,000/- பணத்தொகையை வழங்குவது உகந்ததாகும்.**

| **குழு அங்கத்தவர்களின் பெயர்கள்** | **பதவிகள்** | **கையொப்பம்** |
|---|---|---|
| 1. | கிராம உத்தியோகத்தர் | |
| 2. | சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் | |
| 3. | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |

இரண்டாவது தவணையில் ரூ.200,000/- பணத்தொகையை வழங்குவது உகந்ததாகும்.

| **குழு அங்கத்தவர்களின் பெயர்கள்** | **பதவி** | **கையொப்பம்** |
|---|---|---|
| 1 | கிராம உத்தியோகத்தர் | |
| 2 | சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் | |
| 3. | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |

பிரதேச செயலாளரின் அங்கீகாரம் – பின்வரும் விடயங்கள் காணப்படுவதன் காரணமாக / காணப்படாமையால் நஷ்ட ஈடு வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்/ அங்கீகரிக்க மாட்டேன்.

| | | |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

கையொப்பம்    உத்தியோகபூர்வ முத்திரை

| | | |
|---|---|---|
| முதலாவது தவணைப் பணத்தை அங்கீகரிக்கின்றேன் | | |
| இரண்டாவது தவணைத் தொகையைபணத்தை அங்கீகரிக்கின்றேன் | | |

**பகுதி B**

**சேதம் மீதான மதிப்பீட்டை மேற்கொண்டதன் பின்னர் வர்த்தக கட்டிடத்துக்கான நஷ்ட ஈட்டை பெற்றுக்கொள்ளுதல்**

**தொடர் இலக்கம் (அலுவலக பாவனைக்கு மாத்திரம்)**

**சேதமடைந்துள்ள சொத்துக்கள் மற்றும் சேவைகள் பற்றிய விபரம்**

**சேதமடைந்துள்ள சொத்துக்களின் மதிப்பீடு**

| சேதமடைந்துள்ள சொத்துக்கள் | Rates (per ft2) | மொத்த சரதுரப் பரப்பளவ | சேதமடைந்துள் ள பகுதி (சதுரப்பரப்பளவு) | சேதமடைந்துள்ள சதவீதம் சேதமடைந்துள் ள ேதவீதம் | | சேதத்தின் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| கூரை | | | | | | |
| 1-ஓடு | | | | | | |
| 2-அஸ்பெஸ்டஸ் | | | | | | |
| 3- கொங்கிறீட் | | | | | | |
| 4.G.I.தகரம் | | | | | | |
| 5-கிடுகு /வைக்கோல்/ பனையோலை | | | | | | |
| 6- மரச்சட்டகம் + கூரை | | | | | | |
| 7-மரச்சட்டகம் | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8-மழைநீர்ப் பீலி | | | | | | |
| 9-மழை நீர்ப் பிலீக் குழாய் | | | | | | |
| 10-ஏனைய | | | | | | |
| தரை | | | | | | |
| 1-சீமேந்து | | | | | | |
| 2- டெராசோ | | | | | | |
| 3-டைல் | | | | | | |
| 4-கருங்கல் | | | | | | |
| 5-பதனிடப்பட்ட மரத்தாலான | | | | | | |
| 6-மண் / மணல் | | | | | | |
| 7-ஏனைய | | | | | | |
| சுவர் | | | | | | |
| 1-செங்கல் | | | | | | |
| 2- பெரிய சரளைக் கற்கள் | | | | | | |
| 3- சீமேந்து புளோக்கல் | | | | | | |
| 4- கல் | | | | | | |
| 5-Pressed soil block | | | | | | |
| 6-G.I.தகரம் | | | | | | |
| 7-மண்/ மணல் | | | | | | |
| 8-மரத்தாலான/ பலகை | | | | | | |
| 9- தென்னோலை/வைக்கோல்/ பனையோலை | | | | | | |
| 10-9 கனவளவிலான செங்கல் சுவர் | | | | | | |
| 11- 4.5கனவளவிலான சுவர் | | | | | | |
| 12- சுவரின் உட்புறம் மாத்திரம் சாந்து பூசப்பட்டிருத்தல் | | | | | | |
| 13-வெளிச் சுவருக்கு மாத்திரம் சாந்து பூசப்பட்டிருத்தல் | | | | | | |
| 14-ஏனைய | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அத்திவாரம் | | | | | | |
| 1- செங்கல் | | | | | | |
| 2-கொங்கிறீட் | | | | | | |
| 3-கருங்கல் | | | | | | |
| 4-ஏனைய | | | | | | |
| கதவு / நிலைகள் | | | | | | |
| 1-மரத்தாலான | | | | | | |
| 2- அலுமினியம் | | | | | | |
| 3-கொங்கிறீட் | | | | | | |
| 4- ஏனைய | | | | | | |
| வர்ணம் பூசுதல் | | | | | | |
| 1-வெளிப் புறச் சுவர் | | | | | | |
| 2- உட்புறச் சுவர் | | | | | | |
| 3- கதவு / நிலைகள் | | | | | | |
| 4- தரை | | | | | | |
| 5-ஏனைய | | | | | | |
| மொத்தப் பெறுமதி | | | | | | |

**சேதமடைந்துள்ள சேவைகள் மீதான மதிப்பீடு**

| வீட்டில் சேதமடைந்துள்ள சேவை | மொத்த பரப்பளவு(சதுரப்பரப் பளவு) | சேதமடைந்துள்ள பரப்பளவு ( சதுரப்பரப்பளவு) | மொத்த சேதம் (ரூ) சேதமடைந்துள்ள சதவீதம் |
|---|---|---|---|
| மின்சார முறைமை | | | |
| 1-CEB | | | |
| 2- சூரியக் கலம் | | | |
| 3- ஏனைய | | | |
| நீர்க் குழாய் தொகுதி | | | |
| 1-NWSDB | | | |
| 2- சமூக நீர் முறைமை | | | |
| 3-குழாய்க் கிணவு | | | |

| | | | |
|---|---|---|---|
| 4- கிணறு | | | |
| 5-Well based tap | | | |
| 6- ஏனைய | | | |
| மலசலகூட தொகுதி | | | |
| 1-கட்டிடத்துடன் இணைக்கப்பட்ட அடிப்படை கருவிகள் சகிதம் | | | |
| 2- கட்டிடத்துடன் இணைக்கப்பட்ட நவீன கருவிகள சகிதம் | | | |
| 4- நீர் வழிகள் மூடப்பட்ட மலசலகூடம் | | | |
| 5- ஏனைய | | | |
| துப்பரவு செய்தல் | | | |
| 1-சேதமடைந்த கட்டிடம் | | | |
| 2-கிணறு | | | |
| 3-ஏனைய | | | |
| | | | |
| மொத்தப் பெறுமதி | | | |

புகைப்படங்கள் : முழுமையான ☐ பக்கவாட்டில் தோன்றும் விதம் ☐

சேதமடைந்துள்ள அளவு சதவீதத்தில் : 1- சிறியளவான தேசம் ☐

2- 50% ☐

பின்வரும் விடயங்கள் காரணமாக குறிப்பிட்ட வீடு மற்றும் சொத்துக்கு ஏற்பட்டுள்ள தேசங்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதை விதப்புரை செய்ய முடியாது

1. சேதமடைந்துள்ள வர்த்தகம் சட்டரீதியற்றது. ☐
2. விண்ணப்பதாரியின் நிறுவனத்து காப்புறுதி காப்பீட்டு உரிமை காணப்படுகின்றது. ☐
3. அனர்த்தம் காரணமாக கட்டிடத்துக்கு நஷ்ட ஈடு வழங்குமளவுக்கு போதிய சேதம் / தாக்கம் ஏற்படவில்லை. ☐
4. சேதமடைந்துள்ள கட்டிடம் பயன்படுத்தப்படுவதில்லை. ☐
5. பிறிதொரு நிறுவனத்தினால் நஷ்ட ஈடு வழங்குவதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. ☐

குழுவின் விதப்புரை

............................................ஆம் திகதி இடம்பெற்ற....................................................அனர்த்தம் காரணாக மேலே விபரிக்கப்பட்டுள்ள வர்த்தகத்தின் கட்டிட்கள் சேதமடைந்தன. இந்த சேதத்தை நிவர்த்தி செய்வதற்காக செலவாகும் மொத்தப்பணத்தொகை ரூ...............................................என மதிப்பீ செய்வதுடன்,நஷ்ட ஈடு வழங்கும் நிபந்தனைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு அமைய நஷ்ட ஈடு வழங்குவது உகந்ததென விதப்புரை செய்கின்றேன்.

| விசேட குறிப்புகள் | |
|---|---|

**மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்களின் பெயர்கள்  பதவிகள்  கையொப்பம்**

1. கிராம உத்தியோகத்தர்
2. சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்
3. சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

**பிரதேச செயலாளரின் அங்கீகாரம்**

பிரதேச செயலாளரின் அங்கீகாரம் – பின்வரும் விடயங்கள் காணப்படுவதன் காரணமாக / காணப்படாமையால் நஷ்ட ஈடு வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்/ அங்கீகரிக்க மாட்டேன்

………………………………………………………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………

…………………………………………………… ………………………………………………………………………

திகதி கையொப்பம் உத்தியோகபூர்வ முத்திரை

**சத்தியக்கடதாசி**

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின்………………………………………… ஆகிய இடத்தில் வசிக்கும் ………………………………………… ஆகிய நான், ஒரு பௌத்தனாக / கத்தோலிக்கனாக , உண்மையாகவும் நேர்மையாகவும் கௌரவத்துடனும் பின்வருமாறு சத்தியம் செய்து / உறுதிமொழி அளித்துக் கூறுகின்றேன்:

1. மேற்கூறப்பட்ட பெயருடைய சத்தியம் செய்பவர் / உறுதிமொழி அளிப்பவர் நான் ஆவேன்.
2. மேலே பெயரிடப்பட்டுள்ள நான், நபர்கள் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ………………. இலக்கத்தைக் கொண்ட மற்றும் ………………. திகதியிடப்பட்ட தேசிய அடையாள அட்டையின் உரிமையாளர் ஆவேன்.
3. எனது வீட்டின் மீதும் அந்த வீடு அமைந்துள்ள நிலத்தின் மீதும் எனக்குத் தெளிவான உரிமை உள்ளதாகப் பிரகடனம் செய்கின்றேன்.
4. எனக்குத் தெரிந்தவரை, வீடு கட்டுவதற்குத் தேவையான அனைத்து அனுமதிகளுக்கும் உட்பட்டே எனது வீடு கட்டப்பட்டுள்ளது எனப் பிரகடனம் செய்கின்றேன்.மேலும், எனது வீடு உரிய அனுமதிகளுக்கு இணங்க கட்டப்பட்டுள்ளதாலும், அங்கு நிலச்சரிவு அபாயம் இல்லை என்பது தெளிவாகத் தெரிவதாலும், இழப்பீடு பெறும் இந்த வீட்டிற்கு நிலச்சரிவு அபாயம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள NBRO (தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்) பரிந்துரைகளைப் பெறுவது அவசியமில்லை என எனது சுய விருப்பத்தின் பேரில் பிரகடனம் செய்கின்றேன்.

5. எனது வீடும் அது அமைந்துள்ள நிலமும் அரசாங்க நிலமோ, ஒதுக்கப்பட்ட நிலமோ அல்லது வேறு எந்த வகையிலும் அரசாங்கம் உரிமை கோரும் நிலமோ அல்ல என்று பிரகடனம் செய்கின்றேன். அத்துடன் ஏதேனும் ஒரு காரணத்தினால் அது அத்தகைய நிலம் என்று உறுதிப்படுத்தப்பட்டால், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பணத்தை மீண்டும் வழங்கச் சம்மதிக்கின்றேன் என்றும் பிரகடனம் செய்கின்றேன்.

6. இந்தச் சத்தியக்கடதாசியின் ஊடாகவோ அல்லது இழப்பீடு பெறுவது தொடர்பான வேறு ஏதேனும் விடயத்திலோ நான் எந்தவொரு தவறான தகவலையும் வழங்கவில்லை எனப் பிரகடனம் செய்கின்றேன். தவறான தகவல்களை வழங்கி 'தித்வா' சூறாவளி தொடர்பான அனர்த்த இழப்பீடுகளைப் பெற்றிருப்பின், அந்த இழப்பீடுகளை மீண்டும் அரசாங்கத்தினால் அறவிடுவதற்கு மற்றும் வேறு சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியும் என்பதை நான் அறிவேன் என்றும் பிரகடனம் செய்கின்றேன்.

மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களும் உண்மை மற்றும் சரியானது என சத்தியம் செய்து / உறுதிமொழி அளித்துக் கூறுகின்றேன்

மேலே பெயரிடப்பட்டுள்ள சத்தியம் செய்பவருக்கு மேற்கூறப்பட்ட சத்தியக்கடதாசியை வாசித்துக் காட்டி, அதன் பொருளை விளங்கப்படுத்தியதன் பின்னர், அது உண்மை என ஏற்றுக்கொண்டு , சத்தியம் செய்து / உறுதிமொழி அளித்து ………………… ஆகிய இன்று ………………… மாதத்தில் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார்.

**சமாதான நீதிவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர்**

**NDRSC.3.9**

**<u>திட்வா சூறாவளியின் பாதிப்பினால் சேதமடைந்துள்ள வர்த்தகங்களை மீண்டும் ஆரம்பிக்க முடியுமான நிலைக்கு கொண்டு வருவதற்காக ஒரு தடவை மாத்திரம் வழங்கப்படும் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்</u>**

விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்

1.அனர்த்தம் இடம்பெற்ற காலப்பகுதி முதல் : வரை

| | | |
|---|---|---|
| மாவட்டம் | உரிமையாளர் நிரந்தரமாகக் குடியிருக்கும் | வர்த்தகம் அமைந்துள்ள |
| | | |
| பிரதேச செயலகப் பிரிவு | | |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | | |

3.வர்த்தக உரிமையாளரின் பிரகடனம்

3.1விண்ணப்பதாரியின் முழுப் பெயர்

3.2வர்த்தகத்தின் பெயர்

3.3வர்த்தகத்தின் தன்மை

3.4வருடாந்த வருமானம்

3.5ஊழியர்களின் எண்ணிக்கை

3.6தேசிய அடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

3.7முகவரி

| வர்த்தகம் அமைந்துள்ள |
|---|
| |

3.8தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிலையான | | | | | | | | | | |
| கையடக்க | | | | | | | | | | |

வங்கிக் கணக்கு விபரம்

வங்கி -

கணக்கு இலக்கம்

கிளை -

4.சேதமடைந்துள்ள சொத்து பற்றிய விபரம்

4.1சொத்துக்கான உரிமை 1)- உரிமையாளர் 3). குத்தகை

4)கடமைரீதியான 5)சட்டவிரோத

4.2மொத்த நிலப்பரப்பு ( சதுரப்பரப்பளவு): 1-500இற்கு குறைவு 3-1000இற்கு அதிகம்

4.3 நிறுவனம் அமைந்துள்ள இடத்தின் தன்மை 1- தனிக் கட்டிடம்

2-மாடிக் கட்டிடம்

மாடிகளின் எண்ணிக்கை 1)-.கீழ் மாடி 2.)1 மாடி

3) 2 மாடிகள் 4.)3 மாடிகள்

5. )4 மாடிகள் 6)5 மாடிகள் அல்லது அதிகமானவை

விண்ணப்பதாரி உரிமையாளராகக் காணப்படாத பட்சத்தில், இதற்கான காரணங்களை நியாயப்படுத்தல்

1. கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள தனியான, சிறிய மற்றும் நுண் வர்த்தகங்களுக்காக வர்த்தக அலகொன்றுக்கு ரூ.200,000/-
2. ஏனைய பதிவு செய்யப்பட்டுள்ள தனியான, சிறிய மற்றும் நுண் வர்த்தகங்களுக்கு வர்த்தக அலகொன்றுக்கு ரூ.200,000/-
3. பதிவு செய்யப்படாது வீட்டில் நிரந்தர கட்டிடமொன்றில் கொண்டு நடாத்தப்படும் வர்த்தகங்களுக்கு அலகொன்றுக்கு ரூ.50,000/-
4. பதிவு செய்யப்படாத உற்பத்திக் கைத்தொழில்கள் மற்றும் பசுமை இல்லங்களுக்கு ரூ.50,000/-
5. நடைபாதை மற்றும் நடமாடும் வர்த்தகங்கள் உள்ளிட்ட தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் வர்த்தங்களுக்கு ரூ.25,000/-

**6. விண்ணப்பதாரியின் பிரகடம்**

.............................. ஆம் திகதி மேற்படி முகவரியில் அமைந்திருந்த எனது நிரந்தர வர்த்தகக் கட்டிடம் சேதமடைந்தது. ஆகவே,_வர்த்தகங்களை மீண்டும் ஆரம்பிக்க முடியுமான நிலைக்கு கொண்டு வருவதற்காக மேற்குறிப்பிட்ட ரூ......................கொடுப்பனவை வழங்குமாறு இத்தால் கோருகின்றேன்.

..........................................................................................................................எனும் முகவரியில் அமைந்துள்ள வர்த்தகக் கட்டிடம் ..........................................................ஆம் திகதி அனர்த்தத்தினால் சேதமடைந்துள்ளமையால், வர்த்தக கட்டிடத்தை மீண்டும் வழமைக்கு கொண்டு வருவதற்காக கோரியுள்ள ரூ.................................................................... பணத்தொகையை வழங்குவதற்கு விதப்புரை செய்கின்றேன்.

................................................ ............................ ....................................

கிராம உத்தியோகத்தர் சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் சமுர்த்தி உத்தியோகத்தர்

**9.பிரதேச செயலாளரின் அங்கீகாரம்**

பின்வரும் விடயங்கள் காணப்படுவதன் காரணமாக / காணப்படாமையால் நஷ்ட ஈடு வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்/ அங்கீகரிக்க மாட்டேன்

.......................................................... ...............................................................................

திகதி கையொப்பம் உத்தியோகபூர்வ முத்திரை